Asian Para Games–ல் 3 பதக்கங்களை வென்ற

துளசிமதி முருகேசனுக்கும் - அணியில் இடம்பெற்றோருக்கும் பாராட்டுகள்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 25 -

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் எக்ஸ் தளப்பதிவு வருமாறு:

ஜப்பானில் நடைபெற்று வரும் 5th Asian Para Gamesஇல், Badminton போட்டியில் singles பிரிவில் ஏற்கனவே இந்தியாவுக்கு வெள்ளிப்பதக்கம் பெற்றுத்தந்த தங்கை துளசிமதி முருகேசன், Women's Doubles SL3SU5 பிரிவில் தங்கப் பதக்கமும், Mixed Doubles SL3SU5 பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளார். Asian Para Gamesல் 3 பதக்கங்களை வென்ற அவருக்கும், அணியில் இடம்பெற்றோருக்கும் என் பாராட்டுகள்.

அதேபோல, Badmintonவிளையாட்டில், Men's Singles SL4 பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற தம்பி நவீன் சிவக்குமாருக்கும், Badminton Women's singles SH6 பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தங்கை நித்யஸ்ரீ சிவனுக்கும், Table Tennis விளையாட்டில், Men's Doubles MD4 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஜெஹான் டொரப் மதனுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


தமிழ்நாட்டைச் சேர்ந்த நம் மாற்றுத்திறன் வீரர்கள் Asian Para Gamesஇல் இந்தியாவுக்காக பதக்கங்களைக் குவித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

அவர்களின் வெற்றி, இன்னும் பல நூறு மாற்றுத்திறன் வீரர் - வீராங்கனைகள், விளையாட்டில் சாதிக்க நிச்சயம் ஊக்கம் அளிக்கும்!

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; தினமலப் பத்திரிக்கை ஒன்றில் தினம் வரும் கேள்வி பதிலில் தி.மு.க.வைப் பற்றி மோசமா குறிப்பிட்டு வருதே படிச்சியா!

போண்டி : **ஆமாய்யா; கேள்விப்பட்டேன். அந்தப் பேப்பரை நான் படிக்கறதில்லை. தி.மு.க.வை அழிக்க நெனச்சவெனல்லாம் அழிஞ்ச கதை 'அவாளுக்கு' எங்கே தெரியும். விட்டுத் தள்ளுய்யா!**

வீரவசனம் பேசும் த.வெ.க.வின் அவல ஆட்சிக்கு

அன்றாடம் நடக்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி!

புதுக்கோட்டையில் இரு சிறுமிகளின் பாலியல் வன்கொடுமையை எடுத்துக்காட்டி, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பதிவு!

சென்னை, அக். 25-

புதுக்கோட்டையைச் சேர்ந்த இரு சிறுமிகளுக்கு வேளாங்கண்ணியில் நடைபெற்ற பாலியல் வன்கொடுமையைக் சுட்டிக்காட்டி, வீரவசனம் பேசும் த.வெ.க.வின் அவல ஆட்சிக்கு அன்றாடம் நடைபெறும் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி என்று துணை பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

வேளாங்கண்ணியில் இரண்டு சிறுமிகள் விடுதியில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது; புதுக்கோட்டையைச் சேர்ந்த இரண்டு சிறுமிகளும் வீட்டில் கோபித்துக்கொண்டு வேளாங்கண்ணிக்குச் சென்றதாகக் கூறப்படும் நிலையில் இந்தக் கொடூரம் நடந்துள்ளது.

இத்தகைய குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசு காட்டும் மெத்தனத்தால் பெண்களுக்கு எதிரான வன்முறை நடத்தப்படுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. தமிழ்நாட்டு பெண்களுக்குத் தாங்கள்தான் பாதுகாவலர்கள் என வீரவசனம் பேசுபவர்களின் அவல ஆட்சிக்கு அன்றாடம் பெண்களுக்கு எதிரான குற்றங்களே சாட்சி.

இந்தக் கொடூரக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்: பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில்

மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெறுகின்றது!

மும்பை, அக். 25 -

மும்பை தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (25.10.2026 - ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரியசங்காரன், ம.நீதிதுரை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

கழக ஆக்கப்பணிகள் மற்றும் வரவு / செலவு கணக்கு சமர்ப்பித்தல் வருகிற நவம்பர் மாதம் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞரணி செயலாளர், தமிழக எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாவது பற்றியும் பேசி முடிவு எடுக்கப்பட உள்ளதால் கிளைக்கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த - தந்தை பெரியார் திருவுருவப் படம்!

ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் தந்தை பெரியாருக்குப் பாராட்டு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 25 –

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தந்தை பெரியாரின் 148 ஆம் ஆண்டு பிறந்த நாள் ஓர் உலகத் திருநாளாகவே திகழ்ந்து வருவதை விட, பெரியார் தொண்டர்களுக்கு வேறென்ன கைம்மாறு வேண்டும்?

"ஆஸ்திரேலியாவின் நியூசவுத் வேல்ஸ் சட்ட மேலவையில் – தந்தை பெரியார் அவர்களுக்கும், சமூக சீர்திருத்தத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்கும் புகழாரம் சூட்டியும், பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம், ஆஸ்திரேலியா ("PATCA") அமைப்பைப் பாராட்டியும் தீர்மானம் ஒன்றை கடந்த அக்டோபர் 13 ஆம் தேதியன்று நிறைவேறியுள்ளது.

கிரீன்ஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கேட் ஃபேர்மன் முன்மொழிந்த இந்தத் தீர்மானம், ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான தந்தை பெரியாரின் போராட்டம், பெண்களின் விடுதலைக்கான அவரது குரல், மற்றும் சமத்துவம், பகுத்தறிவு, மனித கண்ணியம் ஆகியவற்றின் மீதான அவரது அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பாராட்டி அங்கீகரித்துள்ளது.

மேலும், ஆஸ்திரேலியாவில் விளிம்புநிலைச் சமூகங்களுக்காக ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டம் ஆற்றிவரும் பணிகளையும் இது பாராட்டியுள்ளது! என்னே சிறப்பு – மக்கள் நாயகத்தின் மகத்தான அரிய செயல் அல்லவா?

இது எவ்வளவு முறையாக, ஜனநாயக ரீதியான தகுதிகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது கூர்ந்து கவனிக்கப்படுவதோடு, வியந்து பாராட்டிட வேண்டிய அருமையான செய்தியாகும்!

தீர்மானம் முன்மொழியப்பட்ட நாள்!

2026 செப்டம்பர் 24 அன்று காலை கேட்ஃபேர்மன் அம்மையார் தீர்மானத்தை முன்மொழிந்து, அவையில் கொண்டு வரவிருப்பதாகக் கூறி, பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டத் தோழர்கள், பொதுவான பெரியார் பற்றாளர்களின் மனதைக் குளிர வைத்தார்.

எனது ஆஸ்திரேலிய பயணத்தின்போது, இம்முயற்சியினைச் சிட்னியில் மேடையில் பகிர்ந்து கொண்டதாக நினைவு!

அவையின் கவனத்திற்குத் தீர்மானம் கொண்டு (இந்தத் தனி நபர் தீர்மான எண்.3721) செல்லப்படுகிறது. அப்போது அவைத் தலைவர், பென்பிராங்கிளின், "திருமதி ஃபேர்மேன் முன்மொழிந்த இத்தீர்மானம், பரிசீலனைக்கு வருகிறது. இதற்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா? என்று கேட்கிறார்.

அவையின் அதிர்ந்த குரல் என்ன தெரியுமா?

"எந்த மறுப்பும் இல்லை, ஆதரவு அதிகம்" என்று கூறி, திருமதி ஃபேர்மனைப் பேச அழைக்கிறார்.

பாராட்டத்தக்க அந்தத் தீர்மான கர்த்தாவான அந்த அம்மையார், 'தந்தை பெரியார் எப்படி தொண்டு செய்து பழுத்த பழம்? ஏன் அவரது அறிவினை, செயலினைப் போற்றிப் பாராட்டிட வேண்டும்?' என்று அடுக்கடுக்கான காரணங்களை அள்ளி அள்ளி வைக்கிறார்!

யுனெஸ்கோ மன்றம் அளித்த பாராட்டு – விருது!

1925 இல், சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய தந்தை பெரியார், 'இது உலக இயக்கமாக ஆகும்' என்று எவ்வளவு முன்னோக்கத்தோடு எழுதினார் – வியப்பல்லவா! அவரது முன்னோக்கு, துணிவு, செயலில், தாம் வெற்றி பெற்றே தீருவோம் என்ற அவரது அழுத்தமான நம்பிக்கை, இன்று எவ்வளவு அருமையாக ஆஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்ற சட்ட மேலவையில் நிரூபணம் ஆகியிருக்கிறது!

27.6.1970 அன்று, சென்னையில் யுனெஸ்கோ மன்றம் தொடக்க விழாவில், அறிவாசானுக்குத் தனிப் பெரும் விருது அளித்துப் பெருமைப்படுத்தியது!

ஒன்றிய கல்வி அமைச்சராக இருந்த மேற்கு வங்காளத்தைச் சார்ந்த டாக்டர் திரிகுண சென் அவர்களும், தந்தை பெரியார் அவர்களால் செதுக்கப்பட்ட ஒப்பற்ற திராவிட அரசியல் கட்டமைப்பாளரான முத்தமிழ் றிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு முதல மைச்சர் என்ற தகுதியிலும் நின்று, தனது ஈரோட்டுக் குருகுல ஆசானுக்கு விருது வழங்கி, பெருமை பெற்றார்.



பெரியார் - "புது உலகின் தொலைநோக்காளர் தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரட்டீஸ் சமூக சீர்திருத்த இயக்கத் தந்தை அறியாமை, மூட நம்பிக்கை, பொருளற்ற பழக்கவழக்கங்கள், இழிவான நடவடிக்கைகள் ஆகியவற்றின் கடும் எதிரி!" என்று பெரியாரைப் போற்றியது யுனெஸ்கோ மன்றம்.

இதனை இப்போது ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றச் சட்ட மேலவை வழிமொழிந்து வாழ்த்துவதுபோல் இல்லையா? ஆஸ்திரேலியத் தோழர்களின் ஒருங்கிணைந்த உழைப்புக்கும், பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டத்தின் கருத்தியலாளர்களுக்கும் கிடைத்த ஒரு தனி அங்கீகாரம் என்று மகிழ்ந்து, அவர்களை உச்சிமேல் வைத்து மெச்சிக் கொள்கிறோம்.

தந்தை பெரியார் உருவப் படம்!

அதற்கு முந்தைய பெரியார் 147 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவின்போது, செப்டம்பரில், இங்கிலாந்தின் இலண்டன் மாநகரில், புகழ்பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழக வளாகத்தில், திராவிடப் பற்றாளர்களும், பெரியாரை விரும்பிய அய்ரோப்பியர்களும் கலந்துகொண்ட ஒரு பெரும் கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைத்து, தந்தை பெரியார் படத்தைத் தமிழ் நாட்டு 'திராவிட மாடல்' ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் நமது சகோதரர் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து வரலாறு படைத்தார்!

நன்றி கலந்த பாராட்டு!

நாம், பழனியில், 1998 இல் நடைபெற்ற பொதுக்குமுவில், "இனிவரும் நூற்றாண்டு, பெரியார் நூற்றாண்டே! காரிருளோ, கிரகண மறைப்புகளோ சூரியனை இல்லாது செய்துவிட முடியுமா? அப்படி நினைத்தால் அதைவிடப் பேதமை வேறு உண்டா?" என்று கூறியதை இப்போது நினைவு கூர்கிறோம்.

பெரியார் உலக மயமாகிறார் என்பதில் இனியும் அய்யம் உண்டோ? நன்றி கலந்த பாராட்டுகளைக் 'கிரீன்ஸ்' கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கேட் ஃபேர்மன் அம்மையார் அவர்களுக்கும், ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் சிந்தனை வட்டத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

விராலிமலை கிழக்கு - அன்னவாசல் தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **மா.பாண்டியன்**, (மண்டையூர், குளத்தூர் தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் விராலிமலை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

அன்னவாசல் தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் கே.எஸ்.சந்திரன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஏ.சுந்தர்ராஜ்** (புல்வயல், இலுப்பூர் தாலுக்கா, புதுக் கோட்டை மாவட்டம்) அவர்கள் அன்னவாசல் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச் செயலாளர்
நாள் : 24.10.2026. தி.மு.க.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்

இருமன்குளம் பரமகுரு மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சங்கரன்கோவில், அக். 25–

தலைமைச் செயற்குழு உறுப்பினரும் சங்கரன்கோவில் ஒன்றியக் குழு உறுப்பினருமான இருமன்குளம் பரமகுரு (வயது 60) நேற்று முன்தினம் (23.10.2026 – வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணியளவில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது தந்தை சங்கரன்கோவில் நகரச் செயலாளராக கழகப் பணியாற்றியவர். பரமகுரு அவர்கள் 1970ஆம் ஆண்டுகளில் இருமன்குளம் கிளைக் கழக செயலாளராக தனது கழகப் பணியை தொடங்கி ஒன்றியப் பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி தற்போது தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்று கழகப் பணிகளை செய்து வந்தார்.

மேலும் 2021–ஆம் ஆண்டு முதல் சங்கரன்கோவில் ஒன்றிய குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

தகவல் அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகச் செயல்பட்டுவந்த கே.இ.நெளஃபல், கழகத்தின் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்.

அண்ணா அறிவாலயம்
சென்னை – 600 018
நாள்: 23.10.2026

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.